ஒன்பதாம் வகுப்பு -கணக்கு-கணமொழி-ஒரு மதிப்பெண் தேர்வு

ஆக்கம்: கோ.இளவரசு

பயிற்சி 1.7

பலவுள் தெரிவு வினாக்கள்

1. கீழ்க்கண்டவற்றில் சரியானது எது?
   (1) $\{7\} \in \{1,2,3,4,5,6,7,8,9,10\}$ (2) $7 \in \{1,2,3,4,5,6,7,8,9,10\}$
   (3) $7 \notin \{1,2,3,4,5,6,7,8,9,10\}$ (4) $\{7\} \not\subseteq \{1,2,3,4,5,6,7,8,9,10\}$

2. கணம் $P = \{x \mid x \in \mathbb{Z}\ , -1 < x < 1\}$ என்பது
   (1) ஒருறுப்புக் கணம் (2) அடுக்குக் கணம் (3) வெற்றுக் கணம் (4) உட்கணம்

3. $U = \{x \mid x \in \mathbb{N}, x < 10\}$ மற்றும் $A = \{x \mid x \in \mathbb{N}, 2 \le x < 6\}$ எனில் $(A')'$ என்பது
   (1) $\{1, 6, 7, 8, 9\}$ (2) $\{1, 2, 3, 4\}$ (3) $\{2, 3, 4, 5\}$ (4) $\{\ \}$

4. $B \subseteq A$ எனில் $n(A \cap B)$ என்பது
   (1) $n(A-B)$ (2) $n(B)$ (3) $n(B-A)$ (4) $n(A)$

5. கணம் $A = \{x, y, z\}$ எனில், A இன் வெற்றுக் கணமில்லாத உட்கணங்களின் எண்ணிக்கை
   (1) 8 (2) 5 (3) 6 (4) 7

6. பின்வருவனவற்றுள் சரியானது எது?
   (1) $\varnothing \subseteq \{a, b\}$ (2) $\varnothing \in \{a, b\}$ (3) $\{a\} \in \{a, b\}$ (4) $a \subseteq \{a, b\}$

7. $A \cup B = A \cap B$, எனில்
   (1) $A \neq B$ (2) $A = B$ (3) $A \subset B$ (4) $B \subset A$

8. $B - A$ என்பது B, எனில் $A \cap B$ என்பது
   (1) A (2) B (3) U (4) $\varnothing$



படம் 1.40

9. அருகில் உள்ள படத்திலிருந்து $n[P(A \Delta B)]$ ஐக் காண்க.
   (1) 8 (2) 16 (3) 32 (4) 64

10. $n(A) = 10$ மற்றும் $n(B) = 15$, எனில் கணம் $A \cap B$ உள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச உறுப்புகளின் எண்ணிக்கை
    (1) 10,15 (2) 15,10 (3) 10,0 (4) 0,10

11. $A = \{\varnothing\}$ மற்றும் $B = P(A)$ எனில் $A \cap B$ ஆனது
    (1) $\{\varnothing, \{\varnothing\}\}$ (2) $\{\varnothing\}$ (3) $\varnothing$ (4) $\{0\}$

12. ஒரு வகுப்பில் உள்ள 50 மாணவர்களில் 35 பேர் சுண்டாட்டம் (carrom) விளையாடுபவர்கள் மற்றும் 20 பேர் சதுரங்கம் விளையாடுபவர்கள் எனில், இந்த இரண்டு விளையாட்டையும் விளையாடுபவர்களின் எண்ணிக்கை
    (1) 5 (2) 30 (3) 15 (4) 10.

13. $U = \{x : x \in \mathbb{N}$ மற்றும் $x < 10\}$, $A = \{1, 2, 3, 5, 8\}$ மற்றும் $B = \{2, 5, 6, 7, 9\}$ எனில், $n\left[(A \cup B)'\right]$ என்பது
    (1) 1 (2) 2 (3) 4 (4) 8

LIVEWORKSHEETS

14. P, Q மற்றும் R என்பன எவையேனும் மூன்று கணங்கள் எனில், $P-(Q\cap R)$ என்பது

(1) $P-(Q\cup R)$ (2) $(P\cap Q)-R$

(3) $(P-Q)\cup(P-R)$ (4) $(P-Q)\cap(P-R)$

15. கீழ்க்காண்பவற்றில் எது சரி?

(1) $A-B=A\cap B$ (2) $A-B=B-A$

(3) $(A\cup B)'=A'\cup B'$ (4) $(A\cap B)'=A'\cup B'$

16. $n(A\cup B\cup C)=100,\ n(A)=4x,\ n(B)=6x,\ n(C)=5x,\ n(A\cap B)=20,$ $n(B\cap C)=15,\ n(A\cap C)=25$ மற்றும் $n(A\cap B\cap C)=10$ எனில், x இன் மதிப்பு

(1) 10 (2) 15 (3) 25 (4) 30

17. A, B மற்றும் C என்பன எவையேனும் மூன்று கணங்கள் எனில், $(A-B)\cap(B-C)$ – க்குச் சமமானது.

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும் (4) ϕ

18. J என்பது மூன்று பக்கங்களைக் கொண்ட உருவங்களின் கணம், K என்பது ஏதேனும் இரண்டு பக்கங்கள் சமமாக உள்ள உருவங்களின் கணம் மற்றும் L என்பது ஒரு கோணம் செங்கோணமாக உள்ள உருவங்களின் கணம் எனில், $J\cap K\cap L$ என்பது

(1) இருசமபக்க முக்கோணங்களின் கணம் (2) சமபக்க முக்கோணங்களின் கணம்

(3) இருசமபக்கச் செங்கோண முக்கோணங்களின் கணம்

(4) செங்கோண முக்கோணங்களின் கணம்.

19. கொடுக்கப்பட்ட வென்படத்தில் நிழலிடப்பட்ட பகுதியானது



(1) $Z-(X\cup Y)$ (2) $(X\cup Y)\cap Z$

(3) $Z-(X\cap Y)$ (4) $Z\cup(X\cap Y)$

20. ஒரு நகரில், 40% மக்கள் ஒரு வகை பழத்தை மட்டும், 35% மக்கள் இரண்டு வகை பழங்களை மட்டும், 20% மக்கள் மூன்று வகை பழங்களையும் விரும்புகிறார்கள் எனில், மேற்கண்ட மூன்று வகை பழங்களையும் விரும்பாதவர்களின் சதவீதம் என்ன?

(1) 5 (2) 8 (3) 10 (4) 15

LIVEWORKSHEETS